பேச வாய்ப்பு தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

123—

அரசு கலைக் கல்லூரி

***5716—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறையூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதியில், புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்து தற்போது கருத்துரு ஏதுமில்லை. தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 18—7—2011 அன்று திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில், ஒரு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் துவக்கி வைத்தார்கள். அங்கு மாணவர்கள் சேர்ந்து பயில்வதற்காக அந்தக் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது. எனவே, துறையூர் தொகுதியைச் சார்ந்த மாணவர்கள் அந்தக் கல்லூரியில் சேர்ந்து பயன்பெற வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் சக்தியைத் திரட்டும் மகா சக்தியே; மதிநுட்பம் கொண்ட மாதரசியே; எண்ணிலா மொழிகள் பேசும் இணையற்ற முதல்வரே; இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

எனது துறையூர் தொகுதி, மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். கிராமப்புறங்களையும், மலைவாழ் மக்களையும் உள்ளடக்கிய தொகுதியாகும். கிராமப்புற மாணவ, மாணவியர்கள் உயர் கல்வி பெற சுமார் 70 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருச்சி மற்றும் பெரம்பலூர் போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவின் கவனத்திற்குக் கொண்டு சென்று எங்கள் தொகுதிக்கு ஒரு அரசுக் கலைக் கல்லூரி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அதைச் செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற துறையூர் தொகுதியில் ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கிறார். திருச்சி மாவட்டத்தில், ஸ்ரீரங்கத்தில் 14 கிலோ மீட்டரில் ஒரு கல்லூரி துவக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரியில் அப்பகுதி மாணவர்கள் சேர்ந்து பயன்பெற வேண்டுமென்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக் கல்லூரி ஒன்று துவக்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார். ஒரு அரசுக் கல்லூரி துவக்க வேண்டுமென்று சொன்னால், ஆண்டொன்றுக்கு தொடரும் செலவினமாக ரூபாய் ஒரு கோடியே 50 இலட்டம் தேவைப்படுகிறது. தொடரா செலவினமாக 8 கோடி ரூபாய், அதாவது கட்டடம் கட்டுவது,* machine *வாங்குவது, தளவாடச் சாமான்கள் வாங்குவது, நூலகம் அமைப்பது போன்ற செலவினங்களுக்காக 8 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு அரசின் நிதி நிலைமைக்கேற்ப, அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*